DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 5/2017 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | கருப்பையா |
| Father's Name | : | கருப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.04.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஏந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் புகார்தாரர் இராமசாமி என்பரை தெரியும். வழக்கின் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் பக்கத்து ஊர்காரர்கள் தான். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 04.04.2015 ம் தேதி காலை 7.30 மணியளவில் வேப்பங்குளம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் உள்ள டீக்கடை முன்பு டீ சாப்பிடுவதற்காக ராமசாமி என்பவர் நின்று கொண்டிருந்தபோது முருகதாஸ், கண்ணதாசன், மணிகண்டன் ஆகியோர்கள் ராமசாமியை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி நாங்கள் ஜே.சி,பி வைத்து மண் எடுத்ததை எங்களுக்கு பயம் இல்லாமல் போலீஸிடமும், கிராம நிர்வாக அலுவலரிடமும் தகவல் கொடுத்து எங்களை எப்படி பிடித்து கொடுக்கலாம் என்று

திட்டினார்கள் என்றும், இதில் கண்ணதாசனும், மணிகண்டனும் இவனை உயிரோடவிட்டால் நாம் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கவே முடியாது என்றும் முருகதாஸிடம் மேற்படி இருவரும் இவனை இந்த இடத்திலேயே வெட்டிக் கொலை செய்து குடலை உறுவி மாலையாக போடுடா என்றும் உறக்கக்கத்தியதும் ராமசாமி உயிருக்குப் பயந்து ஓட முயற்சித்தவரை கண்ணதாசனும், மணிகண்டனும் ஓட விடாமல் பிடித்துக்கொண்ட போது முருகதாஸ் வைத்திருந்த அரிவாளால் இத்தோடு செத்து தொலைந்து போட என்று ராமசாமியின் தலையில் வெட்ட ஓங்கிய போது அந்த வெட்டு ராமசாமியின் வலது தொடையில் மேல் பின்பக்கத்தில் பட்டதில் பலத்த ரத்தக் காயம் ஏற்பட்டது என்றும் அப்போது நானும் சாட்சிகள் சொர்ணலிங்கம் மற்றும் ஜேம்ஸ் ஆகியோர்களும் சத்தம் போட்டு விலக்கவந்தோம் என்றும் அப்போது யாராவது விலக்க வந்தால் உங்களுக்கு இதே தான் நடக்கும் என்று மூவரும்மிரட்ட அங்கு நின்றவர்கள் எல்லாம் பதறி அடித்து ஓடினார்கள் என்றும் போலீஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகள் எனக்கு பக்கத்து ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.